| | | |
|---|---|---|
| **O.S No.** | : | **99/2019** |
| **DATE** | : | **17.11.2025** |
| **பெயர்** | : | **சகிலா** |
| **கணவர் பெயர்** | : | **அல்லா பாட்ஷா** |

**2ம் பிரதிவாதி தரப்பு வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6. தாவா சொத்தை இரண்டு அட்டவணைகளாக காண்பித்துள்ளோம். நூர்னிஷா என்பவர் 22.05.1975ம் தேதி அன்று குத்புதின் சாய்பு என்பவரிடம் கிரையம் பெற்றார் அந்த கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சியிடம் அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் காண்பிக்கப்பட்டது. அதில் பி அட்டவணையில் சொல்லப்பட்ட சொத்து பற்றி ஏதாவது குறிப்பு உள்ளதா என்றால் சாட்சி தனக்கு படிக்க தெரியாது என்று குறிப்பிட்டார்.

7. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரை மற்றும் ஆவணங்களை பற்றி நான் எனது வழக்கறிஞரிடம் கேட்டு விவரம் தெரிந்து கொள்ளவில்லை. எனது சொத்தின் பொது நாராசம் உட்பட கட்டப்பட்டுள்ள வீட்டின் ஜக்குபந்தி விவரம் என்னவென்றால் எனக்கு தெரியாது. A,B அட்டவணை சொத்தை பற்றி வழக்கறிஞரிடம் சட்ட கருத்து வாங்கினேன், ஆவண பதிவின் போது புகைப்படங்கள் வைக்க வேண்டிய விவரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.2 சாட்சியிடம் காண்பிக்க முற்பட்ட போது சாட்சி எனக்கு படிக்க தெரியாது என்று தெரிவித்துவிட்டார். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் பி அட்டவணை சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திண்ணை பற்றிய எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

8. வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்திலும் பி அட்டவணை சொத்து பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 ஆவணமானது வீட்டிற்கானது அதில் இணைப்பு 1லும் மேற்படி பி அட்டவணை திண்ணை பற்றி எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலை பட்ச தீர்ப்பாணை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஒருதலைபட்ச

தீர்ப்பாணையை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒருதலைபட்ச தீர்ப்பாணைக்கு எதிராக 2ம் பிரதிவாதி மனு தாக்கல் செய்ததற்கு பிறகு மேற்படி ஆவணத்தை பதிவு செய்ததற்கான காரணம் என்ன என்று சொன்னால் எனக்கு தெரியாது.

9. 2ம் பிரதிவாதி 2019ம் ஆண்டில் ரகமத்துல்லா வகையராவிடம் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் அமினா பீவியிடம் இருந்து வாங்கினார். மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தின் அளவுகள் மற்றும் விஸ்திரனம் சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அவர் ஒப்புக் கொண்டார். 1975ல் குறிப்பிட்டுள்ள சொத்தினை நூர்னிஷாவின் வாரிசுகள் அவரது காலத்திற்கு பிறகு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள சொத்தை தவிர்த்து அவர்களுக்கு வேறு சொத்துக்கள் கிடையாது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் படி ஏ, பி, சி அட்டவணை சொத்துக்களை ரகமத்துல்லா, ஜெய்துான், தமின் அன்சாரி ஆகியோருக்கிடையே முறையே பிரித்து கொண்டார்கள்.

10. வா.சா.ஆ.7 ஆவணம் கூட்டு பட்டா தான் தனிப்பட்டா எதுவும் வழங்கப்படவில்லை. அந்த ஆவணத்தின் வரைபடத்திலும் பி அட்டவணை சொத்து பற்றிய எந்த உட்பிரிவும் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்திலும் பி அட்டவணை திண்ணை பற்றி குறிப்பு தனியாக இல்லை என்று சொன்னால் சரிதான். தற்போது 2ம் பிரதிவாதி அவர் வாங்கிய பகுதியின் முன்புறத்தில் ஆடுகறிக்கடை வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எனது இளைய மகன் பெயர் நையிம், அவர் 2ம் பிரதிவாதி மீது மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கில் அசல் வழக்கை பற்றி எந்த குறிப்பும் இல்லாமல் மறைத்து தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட

தீர்ப்பாணையின் அடிப்படையில் பி அட்டவணை பொறுத்து பட்டா மாற்ற முயற்சி செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

11. பொது நாராசம் 4 அடி நீளத்திற்கு 80அடியில் ஆக்கிரமிப்பு செய்து 2ம் பிரதிவாதி வாங்கிய சொத்தையும் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்து தவறான தகவல்களுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பிராதில் வாய்மொழி கிரையம் பற்றி நான் ஏதாவது சொல்லியிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அவர் வாங்கிய சொத்தில் தொழில் நடத்திவருகிறார் எனதுமகன் பணபலத்தின் அடிப்படையில் அவரது சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ–1 ஆவணம் 2ம் பிரதிவாதி மேலுள்ள தீர்ப்பாணை தள்ளுபடி செய்யப்பட்டதால் அவரை கட்டுப்படுத்தாது மேற்படி பதிவு ஆவணத்தை ரத்து செய்ய நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

12. எனது பிராதில் பரிகாரத்தில் வாய்மொழியாக எனது விற்பனையாளர்கள் ஒப்புக் கொண்டார்கள் என்று ஏதாவது சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் 2002ல் இருந்து வாய்மொழியின் அடிப்படையில் சுவாதினத்தில் இருப்பதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் சுவாதினத்தில் இல்லாததால் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. சாட்சியிடம் வா.சா.ஆ.1 காண்பிக்கப்பட்டது. இந்த வரைபடத்திற்கும் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிப்பேராணையின் வரைபடத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் அந்த இரு வரைபடம் பற்றி எனக்கு தெரியாது, ஆகவே இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,Kancheepuram.